ஓலை 38 | ஓசை 142 | மே 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்.**

தமக்குப் பயனிருந்தால் நட்புக் கொண்டும், பயன் இல்லை என்றால் நட்பை விலக்கியும் வாழ்வதில் தமக்கு இணை இல்லாதவராய் இருப்பாரின் நட்பைப் பெற்றென்ன இழந்தென்ன?.

**Translation:**

What though you gain or lose
friendship of men of alien heart,
Who when you thrive are friends,
and when you fail depart.

**Explanation:**

Of what avail is it to get or lose
the friendship of those
who love when there is gain and leave
when there is none ?.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல

# இலக்கியப் பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

## நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

## இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

## வடிவமைப்பு

அ.வில்சன்


## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa  www.அகரமுதல.com  aagaramuthala@gmail.com

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# வீழ்வது தோல்வியல்ல

வீழ்வது தோல்வியா வெற்றியின் துவக்கமே
வீழ்ந்திடும் அருவிதான் வெற்றியின் முழுக்கமே
தாழ்வுகள் எதற்கினி தாண்டிடு தடையும்நீ
வாழ்க்கையோ ஒருமுறை வாழலாம் இன்பமாய்

தோல்விகள் தானிங்கு தோரணம் ஆகுமே
பால்நிலா தேய்வதும் பாவமும் இல்லையே
நால்வகை விருந்துதான் நாளுமே கிடைக்குமா
தோல்வியின் பாடங்கள் சொல்லுமே மந்திரம்

வலியிலும் வழியினை வகுத்திட வேண்டுமே
நலிவுகள் இன்றியே நகர்த்திடு வாழ்க்கையை
பொலிவதும் முய்றசியால் பொழியுமே மகிழ்வினை
புலியெனப் பாய்ந்துதான் புரட்டியே போட்டிடு

வீழ்ச்சிகள் குற்றமா? வெற்றிதான் இன்பமா?
வாழ்க்கையில் நியதிகள் வகுத்தது யாரது?
வீழ்ந்திடும் அலைகள்தான் விரைவுடன் எழுந்திடும்
ஆழ்கடல் அதனையும் அழகாய் காட்டிடும்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# தன்முனைக்கவிதை

முழுநிலவு இரவில்
தூங்காத விழிகள் நான்கு
எனக்கும் நிலவுக்கும்
பிளேம்ஸ் பார்த்தால் 'காதல்'



பூங்காவில் ஊஞ்சல்
காலியாகட்டும் என்கிறேன்
மூன்றாம் பிறை நிலவை
காட்டுகிறாள் மகள்.

கணவர் எழுதிய கவிதைகள்
நூலாய் வெளியிடும் விதவை
வார்த்தையில்லா ஏற்புரை
கண்ணீருடன் நிறைவு.

தாத்தாவும் பாட்டியும்
மரணத்திலும் இணைந்தே
எங்கள் குடும்பமும்
அன்றில் பரம்பரை தான்

துண்டு சீட்டு ஹைக்கூவை
புத்தரிடம் கொடுக்கிறேன்
சிரித்த முகத்துடன்
உன்னில் நான் என்கிறார்

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# குற்றங்கடிதல்

**அதிகாரம் : 44**




சினச்செருக்குடன் இழிகுணமும்
இல்லாதான் வாழ்வில்.
தனச்செல்வமென்பது அவன்
சான்றோரால் புகழப்படுதலாம்.

ஈதலிலா உலோபப்பண்பும்
மாண்பிலா மானவுணர்வும்.
தகுதியிலா தன்னுவகையும்
தலைவனுக்கு குற்றங்களே.

தினையளவு குற்றம்நேரினும்
பனையளவுகருதி அதை.
மனதளவில் தற்காப்போரே
பழிநாணும் பெருமக்கள்.

கொடும்பகையாம் குற்றமொருவனுக்கு
கடுமழிவைத் தருங்கண்.
படுங்குற்றம் தவிர்த்து
தடம்காத்தல் நலமே.

நேரும்முன் குற்றந்தவிர்த்து
தற்காவாதான் வாழ்க்கை.
நெருப்புமுன் வைக்கோல்போராய்
தணலேறி அழிந்துபோம்.

தன்குற்றமுன்நீக்கி பின்
பிறன்குற்றம் கண்ணோக்கி.
நீக்குவான் தலைவனுக்கு
என்குற்றமும் இல.

செல்வம் கைகொள்கையில்
செய்வது செய்யாமல்.
தவறியவனின் செல்வம்
உய்யும்வழியின்றி அழியும்.

பொருட்பித்து கொண்டலையும்
உலோபநெஞ்சத்தான் குணம்.
பெருங்குற்றங்களோடு சேர்க்கவியலா
தனிப்பெருங் குற்றமாம்.

எக்காலத்தும் தற்பெருமைகொளல்
எவர்க்கும் கேட்டின்குற்றமாம்.
நற்பயனிலாச் செய்கைகளை
எப்பொழுதும் செய்தலாகா.

தன்னாசையால் பிறர்க்கின்னா
விளைக்காது விரும்பியதடையும்.
வல்லோனுக்கு வஞ்சகரின்
பகைசூழ்ச்சிகள் பயனிலாதழியும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# நியாயம்



அவள் விரும்புவாளென்று
நிறைய இருளை
கொண்டுவந்திருக்கிறேன்.
இருளின்
அர்த்தமறிந்தவளவள்
பாசாங்கற்ற
பகலே பிடிக்குமென்று
பளிச்சென்றுரைக்கிறாள்.
நாணில்லா கழுத்தைக் காட்டியும்
நாகரிகம் கருதியும்
நாணத்தால் என்னிலிருந்து
விலகி நிற்கிறாள்.
நிச்சயமது
நியாயமானதாகவே தெரிகிறது
எனக்கு.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# இறைவனுக்கே என் புகழ்!

இருள் சூழ்ந்த உள்ளத்தில்
ஒளி விளக்கேற்றி வைத்து
தீய வழிகளை விட்டும்
நல்வழியில் நடமாட வைத்து
அன்பான பெற்றோரால்
என்னை அரவணைக்க வைத்து
அழகான குடும்பத்தில் என்னை
சிறப்பாய் வாழ வைத்து
என்னில் ஓடும் குருதியிலே
இறை உணர்வை கசிய வைத்து
சோதனையால் வடியும் கண்ணீர் துளிகளை
சாதனை முத்துக்களாய் மாற்றிவிடும்
என் இறைவனுக்கே புகழ் அனைத்தும்




கவிஞர் அகீலா ஐவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# பொம்மலாட்டம்

பண்டைய தமிழரின் மரபுக் கலையில்
பாமரனையும் கவர்ந்தகலை பொம்மலாட்டம் எனுங்கலையே!
பொம்மலாட்ட மதிலுமுண்டு இருவகைகள் தமிழ்மண்ணில்;
பொம்மைகள் தோலாலும் மரத்தாலும் செயப்பட
தோல்பொம்மலாட்டம் மரப்பொம்மலாட்டம் என்றது வகைப்பட்டதே!

பாவைக்கூத்து என்றழைக் கப்பட்ட இக்கலை
பரவியிருந்து பாரதத்தின் வேறுசில பகுதிகளிலும்;
உலகின் சிற்சில பகுதிகளிலும் வாழ்ந்தகலை
உருதெரியாமல் அழிந்திடுமோ இனிவருங்காலம திலெனவருந்துவோர்
உலகிலின்றும் இருக்கின்றார் என்பதும் மகிழச்சிதானே!



வான்புகழும் வள்ளுவத்தைப் படைத்திட்ட வள்ளுவனார்
வாழ்ந்த காலமதில் இருந்தவிக் கலையினை
வள்ளுவனார் கண்டிருப்பாரோ? கண்டு சுவைத்திருப்பாரோ?
விடைதருமா வள்ளுவம்நம் தேடலுக்கென்ற எண்ணம்
வருகின்றதோ உமக்கும், எனக்கது வந்ததுபோல?

மகாகவி பாரதி தனது கவிதையில்
மகாநடிகர்களாய் வாழ்ந்த சமகால மனிதர்களை
"நடிப்பு சுதேசிகள் என்றவொரு கவிதையில்
நயம்படவே நானிலம் வாழ்வோர்க்கு எடுத்துரைத்ததை
நாள்தோறும் நாம்பயின்று நிஜமனிதர்களாய் வாழவேண்டுமன்றோ?

தமிழ்ப்பாட்டன் வள்ளுவன் தான்படைத்த அதிகாரமொன்றில்
தன்னிகரற்ற பண்பாம் நாணத்தின் சிறப்பையும்
தரணிவாழ் ஆணுக்கும் பெண்ணுக்கும் நாணத்தின்
தட்டுப்பாடற்ற தேவையையும் எடுத்துச்சொல்ல ″ நாணுடமை″
தன்னை பொம்மலாட்டமதைக் காட்டி விளக்கினாரே!

ஆணுக்கும் பெண்ணுக்கும் அவரவர் மனத்தில்
நாணமிருக்க வேண்டும்; நாணமின்றி இருப்பரென்றாலவர்
இயக்கமென்பது உயிரற்ற மரப்பொம்மை போன்றதென்று
இடித்துரைத்தபின்னும் நாணமின்றி வாழ்வோரிருப்பதால நாளும்
இங்குபாவைக்கூத் தென்பதுதொடர்ந்து நடக்கிறதென்பேன் அடியேனே!

குறள் 1020:
நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி.

# வாழ்தலும் இருத்தலும்

வாழ்வே வரமென
வாழ்தலில் சிலரும்
இன்பமே வரமாய் பெற்று
இருத்தலில் சிலரும் இருந்திட!
கடமைக்காக வாழும் வாழ்வுதனை
உருவாக்கி சிலரும்
கண்ணியமிழந்து வாழ்வை
சீரழித்து சிலரும் இருந்திட!
வாழ்தலும் இருத்தலும் அவரவர்
வரையறை என்றே சிலரும் முற்பட
வாழ்ந்தே பார்த்திடுவோம் என்றே
வாழத் தொடங்குவரும் சிலருண்டே!
இருந்திடும் காலமதை
இன்பமாய் கழித்திடுவோம்!
உண்மை நேர்மையை நிலைநாட்டி
உயர்ந்து வாழ்ந்திடுவோம்!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# வீழ்வது தோல்வி அல்ல

விழுவதை எண்ணி வருத்தம் கொள்வதோ
விழுவதால்தான் எழலாம் என்பதை அறிவீரோ
விழுந்தால் விமர்சனம் என்று எண்ணமோ?
விழுந்தால்தான் விமர்சிப்போரை
அறிந்துகொண்டாயென்பதை அறிவீரோ?

உண்மை உறவுகளை விழுவதால் அறிவாய்
உயர்ந்த உதவும் உள்ளங்களை அறிவாய்
உதாசீனம் செய்யும் பொய்யானோரை அறிவாய்
உமிழ்ந்து துப்பும் கெட்டவர்களை அறிவாய்

மிதித்து மகிழ்வடையும் உறவுகளை அறிவாய்
மின்சாரமாய் வார்த்தையால் தாக்குவோரை அறிவாய்
மிதிவண்டி போல் பாவிப்போரை அறிவாய்
மின்னல் இடியாகி அச்சமூட்டுவோரை அறிவாய்



கை தட்டி கேவலப்படுத்துவோரை அறிவாய்
கையாலாகாதென்று தூக்கி எறிவோரை அறிவாய்
கையோடு உள்ள திறமையை அறிவாய்
கை கட்டி நில்லாதிருக்கும் தந்திரத்தை அறிவாய்

மறந்த இறைவனின் உதவியை அறிவாய்
மலை போன்ற தைரியத்தை அறிவாய்
மடமையை விலக்கி வெற்றியை அடைவாய்
மணக்கும் வாழ்வை போராடி வெல்வாய்

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# உதயமாகு வரலாறே

வையகத்தில் பிறந்தால்
எதையும் தாங்க வேண்டும்
நம் வாழ்க்கை வரலாறு
ஆக மாற வேண்டுமானால்
நாம் சாதனை படைக்க வேண்டும்
வாழும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிடு
எதையும் தாங்கிக் கொண்டு பயணித்திடு
வெற்றி எல்லோருக்கும் எளிதாக கிடைக்காதே
பல முறைப் போராடினால் தான் பெற முடியும்
நாட்கள் நீண்ட நாளாக
எடுத்துக் கொண்டால் தான்
வரலாறு சிறப்பாக அமைய வேண்டுமானால்
செயல் வடிவில் உனது கருத்தினை செய்துக் காட்டிடு
பிறந்தால் மட்டும் போதாது
இறப்பிலும் நம்மை பற்றி பேச வேண்டுமே
முன்னோர்களின் வாழ்வை நினைத்துப் பார்த்தாலே
பல எண்ணங்கள் உருவாக வாய்ப்பு உண்டு
கடினமாக உழைத்து பெறும் வெற்றி
வாழ்வில் நிலைத்து நிற்கும்
சூரியன் தினமும் உதிப்பது போல
தினமும் புதிய சிந்தனையோடு உதித்தாலே
வரலாறு உதயமாகுமே
வெளி உலகத்தை நாம் காண்போமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# அன்பு உடைமை

## அதிகாரம் 8

அன்பேநிலையானது




அன்பான இதயத்திற்கு அணை ஏது?

அன்பு கொண்டவரின் உள்ளம்
சிறு விழிநீரில் கூட வெளிப்படுமே

எல்லாம் தனக்கே என்பர் அன்பிலார்
அன்பு உள்ளமோ தன் எலும்பையும் கூட
பிறருக்கு உரியதாக்கி மகிழுமே

அன்புள்ளம் கொண்டோருக்கு
பண்பான மேன்மை தரும் நட்பு கை கூடுமே

வாழும் வாழ்க்கையில் இன்பமாக
சிறப்பாக வாழ்வது அன்புடையோரின் வாழ்வே

அறியாதவர் தான் அறத்திற்கு அன்பு துணை என்பர்
ஆராய்ந்து பார்த்தோம் எனில்
மறத்திற்கும் அன்பே துணை இருக்கும் என்பதை அறிவர்

எலும்பில்லாத உயிரினங்களை வெயில் வருத்துவது போல
அன்பில்லாதவனின் அறமும் வருத்தப்படுத்துமே

அகத்தில் அன்பு கொண்ட இல்லறமே சிறக்கும் இல்லையெனில்
பாலைவனத்தில் பட்ட மரம் துளித்தது போல் நிலையற்றதே

அகத்தில் அன்பு இல்லையெனில்
புற அழகு இருந்து பயனேது

அன்பு கொண்டு வாழ்வதே உயிருள்ள உடலாகும்.
இல்லையேல்
எலும்பின் மேல் தோல் போர்த்திய உடலுக்கு சமமாகுமே

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# ஹைக்கூ

நெடுநாட்கள் ஆக
என் மிதிவண்டியை பிடித்துக்கொண்டது
பாகல்கொடி.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# கடவுளிடம்!

கடவுளிடம்!



மல்லுக்கட்டி வம்பிழுக்கும் மட்டமான மனிதனும்
மன்றாடுவான் மடிப்பிச்சை யேந்திடுவானே
உயிர் பிச்சையிட்டவனிடம்!

மறுபார்வை பார்த்திடாத பரமனும்
எழுதிடுவான் பாவியின் பாவக்கணக்கை
எழுதி முடித்து நடனமாடி
நரகத்தில் தள்ளி விட்டு தவிக்கவிடுவானே!

பெண்மை மன்னிப்பு

தன் அருமை தெரியா? தன் கணவனையும்
தலையெழுத்து என்று தன் அமைதியால்
தன் குலப் பெருமை காக்கவே
தயங்கித் தவிப்பவளுக்கு
தயைகூர்ந்து யார் தருவார் ?
பாவமன்னிப்பு விமோசனம்!

தொலைத்து விட்டேன் துணையே தூரமாக
தொடர்ந்து தேடினேன்
தொலைவில் சென்ற உனை துரத்தி பிடிக்கவே
தனிமையில் விரைகிறேன்
தராத ஓர் வார்த்தைக்காக?

வேண்டி கேட்டயெனை
வேண்டாமென்று தரவில்லை
வேண்டி வேண்டி மீண்டும் மீண்டும்
மீன் விழியால் துடித்தேனே
மீளா பார்வை பார்த்துவிட்டு
மீட்டாமலே சென்றாயே!

மன்னிப்பு பரிசாக!

மறுத்தவருக்கு மனோ தண்டனையாக
மறந்தவருக்கு மலர் கொத்தாக
மன்னிப்பு மலர்கிறதே!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்


# வெற்றிக்களிப்பு

படிப்பில் தேர்ச்சியடைந்து
நல்ல மதிப்பெண் பெறுவதிலும்
விளையாட்டில் முதன்மை பெற்று
புகழ் அடைவதும்
நேர்மையாய் உழைத்து
உயர்பதவி அடைவதில் பெருமையும்
தேர்தலில் வெற்றியடைந்து
ஆட்சிபீடத்தில் அமர்வதில் வரும் கம்பீரமும்
வெற்றிக் களிப்பை அளித்திடும்!
தலைக்கனம் இல்லாமல்
இருந்த இடம் மறக்காமல்
பணிவோடு இருந்திட்டால்
வெற்றிக் களிப்பை முழுதுமாக
உணர்ந்திடலாம்!




கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# அவள் ஒரு ஏமாற்றுவாதி



கண்ணீர் அறியா காலத்தில்
இன்று கண்ணீரை எண்ணுகிறது என் மனம்
குருதி ஓட்டம் அடங்கி போய்
குறுகிய மூலையில் என் மூளையும் மழுங்கிப் போய்
ஏன் அவளை சந்தித்தேன்?
ஏன் அவள் என்னிடம் காதலை சொன்னாள்?

கடமையைத் தொடர்ந்த
காலத்தில் காதலையும் தொடர்ந்தேன்
இன்று தொடர முடியாத தூரத்தில் அவளும் நானும்
ஏமாற்றத்தின் விளிம்பில் நான் மட்டும்.
ஆனால் அவள்
யாரோ ஒருவனுடன் ஒரு உலகத்தில் ஒய்யாரமாக.

அவள் ஒப்பனையின் அலங்காரம்
தினம் தினம் திகட்டுதே அவளுக்கு
மற்றவனை ஏமாற்றி
சபிக்க முடியாத சத்தியத்தில் நான்
என் சக்தியை கொண்டு சாதிக்க நினைக்கிறேன்
அவள் முன்

வருங்காலங்களில்
தினம் தினம் நினைக்க வைக்கும் அளவுக்கு
என் மனதின் வலிமையோடு
போராடிக் கொண்டிருக்கிறேன்
என் கடமையின் வெற்றியை நோக்கி
என் கோரிக்கை ஒன்று மட்டும்தான்

உன் உள்ளம் அவனிடமாவது
உண்மையாக இருக்கட்டும்
அவனையும் ஏமாற்றாமல்
என்னவள் அம்பியே!

உன் அலங்காரம் தினம் புதுவிதம்
ஆனால் அவனிடம் ஒரு விதமாக இருக்கட்டும் உண்மையாக.
உன் அரங்கத்தில் ஆதிக்கம் அமைதியாகட்டும் அம்பியே!

ஆர்ப்பரிக்கும் உன் மனம் நூற்றாண்டுகளில் மாறுபட்டது.
இனியாவது மாறுபடாமல் மாற்றம் பெறு.
அவனுக்காவது உண்மையாக அம்பியே!
என்னவள் ஒரு ஏமாற்றுவாதி யாருக்காக அம்பியே?
எதற்காக எனக்கு விடை தராமல் சென்றாய் ?

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# பேசும் மௌனம்

மௌனம் பேசும் மொழி
மனதின் ஆழத் தொனி

மென்மை அதன் பாணி
முட்டிப் பெருகும் கேணி

இருளில் பேசும் ஒலி
இடைவிடாமல் அரிக்கும் எலி

பெட்டியில் ஆடும் தூளி
பேரமைதியில் உணரும் வலி

வலிகளின் வடிகால் வழி
வார்த்தைகள் அடங்கும் குழி



தேங்கும் கவிதைகளின் திடல்
தீராக் கவலைகளின் கடல்

ஏங்கும் ஆசையின் பெருவெளி
ஆங்காங்கே கண்ணீர் பலதுளி

விலாசம் இல்லா மடல்
வனவாசம் செல்லும் உடல்

மையல் மறைத்த களி
மருந்தாய் அமையும் கனி

ஆற்றல் கொண்ட ஆயுதம்
தேற்றவே முடியாத தண்டனை

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர் (இலங்கை)

# இயற்கை அன்னை

காலை நேரம் என் கால்கள் பயணம் போகும்
இளம் குயில்கள் கீதம் பாடும்
என் மனம் மெல்ல அதை ரசித்து தாளம் போடும்
தென்றல் காற்று அசைந்து ஆடும்
தேன் குடிக்கும் வண்டுகள் சிரிப்பது ஆகும்
பூக்களின் அன்பு காதல் ஆகும்
பறவைகளின் வார்த்தை கவிதை ஆகும்
பாயுந்து ஓடும் நீரின் ஓசை புது மெட்டு போடும்
பார்ப்பவர்கள் மனத்தை கவர்ந்து போகும்
இயற்கையின் வளம் மிக அழகாகும்
அள்ள அள்ள கொடுப்பது
இயற்கையின் கருணையாகும்
வாசம் இல்ல மலர் புது நேசம் ஆகும்
புன்னகையின் எண்ணம் புது வண்ணம் ஆகும்
பூத்து குலுக்கும், மரம், செடி, கொடி,
இயற்கையின் சொந்தமாகும்
துள்ளி ஓடும் விலங்குகள்
இயற்கை அன்னையின் பிள்ளையாகும்
வாழும் மனிதன் இயற்கையின் படைப்பாகும்
ஆண்டவானின் அற்புதம் மிக அழகாகும்
ஒவ்வொன்றும் ஒரு உயிர் ஆகும்
அதை உணர்ந்தால் மிக அழகாகும்
காற்றின் தேவை அதிகமாகும்
காடுகளை அழிப்பது மிக தவறாகும்
வறண்டு போவது நிலம் ஆகும்
வாழ வைப்பது மழையாகும்
மனிதனின் தேவை அதிகமாகும்
இயற்கையை காப்பது உன் கடமையாகும்
உன்னை வாழ வைப்பது இயற்கை
அன்னையின் பொறுப்பாகும்
இறைவனின் படைப்பாகும்
நான் நேசிக்கும் சாமியாகும்



கவிஞர் எஸ்.தாரா பி.ஏ,சேலம்

# எட்டிப்பிடி பதக்கத்தை

புள்ளினத்தின் பள்ளியெழுச்சி
கேட்டதும் விழித்திடு.
உள்ளத்தில் சோம்பலொழித்தே
உற்சாகமாய் எழுந்திடு.

எச்செயலையும் நாளும்
விரும்பிச் செய்திடு.
குறிக்கோளோடு பயணித்திட
மனதைக் குவித்திடு.




தடை தாண்டியோடும்
மழைநீர் ஓட்டமாய்
இடரினைத் தாண்டி
இலக்கினைக் குறிவைத்திடு.

தளராத முயற்சி
தன்னம்பிக்கையோடு பயிற்சி
தயங்காமல் செய்திட
அயராது போராடு.

கனவை நனவாக்க
மனதிலே துணிவுகொள்.
மலரைப் பறிக்க
முள்ளது தடுக்கும்.

வெற்றியைத் தீண்ட
தோல்வி குறுக்கிடும்.
தோல்விப் பாடங்களால்
குறைகளை அகற்றிடு.

வீழ்ச்சியில் துவளாமல்
விழிப்புடன் போராடு.
சோம்பல் இருள்
சூழும் முன்பே

சுதாரித்து சுறுசுறுப்பாய்ச்
சுயம்புவாய் நின்றிடு.
முயன்றால் முடியாதது
ஏதும் இல்லை.

சாதித்தே வெற்றிப்
பதக்கத்தை ஏந்திடு
நாளை உன்சாதனை
நல்லதொரு வரலாறாகும்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# காசிருந்தால் போதுமா?

கூரைமேல் சோறு போட
கூட்டம் காக்கைகள் என
கர்வமாக வாழ்ந்த கணவன்
கட்டிய மனைவி இறந்தவுடன்
கவனிப்பாறின்றி போகிறார்
கடலளவாய் வீடுமுண்டு
கப்பல் போல வண்டியுண்டு
கூப்பிட்ட குரலுக்கு ஏவல் செய்ய
கூலிக்கு மாறடிக்கும் ஆளுமுண்டு
காசிருக்கும் கர்வத்தில் ஆடிட
காணாமல் போனது உண்மை உறவு
கனிவாகப் பேசிடவும் தனிமைக்
கண்ணீர் துடைக்கவும் ஆளில்லை
குன்றலோடே இறந்திட
கணினியின் திரையிலே
காரியம் செய்கிறான்
கடல் கடந்து வாழும் மகன்
காசின் கர்வம் கரைந்து
காற்றில் கலந்தவர்
காலம் கடந்து உணர்கிறார்
காசுமட்டுமே வாழ்க்கையல்ல என.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# விவ-சாயம் போகுதடா

மழையின்றி மண்ணிலிருக்கும்
உயிர்களெல்லாம் தவிக்குதடா
மாடின்றி உழுவதும்தான்
பெருங் கொடுமையடா

உரத்திற்கு வரிசையில் நின்ற
உயிரும் வதங்குதடா
நூறுநாளு வேலையால
ஊருக்குள்ள கொண்டாட்டமடா

கூலிக்கு ஆளின்றி
களைகூட வளருதடா
பூச்சிக்கொல்லி நச்சாகி
மண்ணும் மலடாகுதடா



விளையுமுனு விதைச்சவனோ
வீதியில நிற்கிறான்டா
வறட்சியால பச்சையும்தான்
சாயமென வெளுத்ததடா

அநியாய வரியால
அத்தனைக்கும் விலையேறுதடா
வயலில் இறங்கி வேலை செஞ்சதுக்கு
நியாயமான கூலிகூட இல்லையடா

மனுசனோட பாடுபட்ட மாடும்
பட்டினியில் கிடக்குதடா
மழைமாரி பெய்யாம
வானம்கூட எங்களைத்தான் ஏமாற்றுதடா

உழுதவனோ மாற்றுத்துணியில்லாம
அரைநிர்வாணமா திரியுறான்டா
இருக்குற நஞ்சை புஞ்சை நிலத்தையும்
வித்திடலாமுனு தோனுதடா

பாட்டன் பூட்டன் பாடுபட்டு வாங்கிய மண்ணென்று
மனசும் ஆறுதல் சொல்லி தேற்றுதடா
எல்லாரும் பட்டணமே கதியென்றுபோனா
பசிக்கு எதை தின்பதென்று யோசிக்கறேன்டா

அதனாலதான் வருமானமே இல்லையென தெரிந்திருந்தும்
இதுதான் கதியென்று கிடக்கறேன்டா.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# இயற்கைக்கு நஞ்சூட்டுவதா?

பெட்ரோலிய வகையைச் சேர்ந்த பிளாஸ்டிக் பைகள்
செயற்கை மூலக்கூறினால் உருவான
இயற்கையை வேரோடு சாய்க்கும் உயிர் கொல்லியே

இயற்கையன்னையின் இணையில்லா அழகை
இப்பாரின் ஒவ்வொரு பசுந்தளிரிலும் நாம் காணலாம்..



மறு சுழற்சி செய்யப்படாத இந்த பிளாஸ்டிக்
உயிர்களின் சுழற்சிக்கு தீங்கிழைப்பது
யாவரும் அறிந்த உண்மையே.

உயிர்களின் தோற்றம் உருவான இப்பூமி
தரமிழப்பது முறைதானா?

மூலை முடுக்குகளில், ஆங்காங்கே
காற்றில் அடித்து செல்லப்பட்ட படி என்று பிளாஸ்டிக் பைகள்.

இவை எரிக்கப்படும் போது பிராணவாயுக்கு உவப்பற்றதாகிறது.
புதைக்கப்படும்போது பூமியின் இயற்கைத் தன்மைக்கு தீங்கு விளைவிக்கப்படுகிறது.

பெட்ரோலிய வகையைச் சேர்ந்த இவை
பேராபத்தானவை என்பதை உணர மறுப்பதே எம் மடமை

இருபது நிமிடப் பாவனை கொண்ட இப்பிளாஸ்டிக் பைகள்
ஏழு சதவீதம் மட்டுமே மறு சுழற்சி ஆவது
விஞ்ஞானம் சொல்லும் உண்மையே.

பயிருக்கு உரமாகி உணவளிக்கும்
மண்ணுக்கு நஞ்சூட்டுவது தகுமா.

பிளாஸ்டிக் பாவனையைத் தடுத்து
இயற்கையால் ஒரு புது உலகம் படைப்போம் இப்பாரினில்.

கவிஞர் சுமையா சத்தார்,நெல்லியகம (அனுராதபுரம்)

# நெஞ்சுக்குள்ளே ஒநெனப்பு

நெஞ்சுக்குள்ளே ஒநெனப்பு
நெருஞ்சி முள்ளாக் குத்துதய்யா



கஞ்சிக் கலையம் தலையில் வெச்சு
களத்து மேட்டுக்கு வரும்போது
கொஞ்சிப் பேசி என் மனசை
கொள்ளை கொண்ட மச்சானே

அள்ளி அணைக்க ஆசைப்பட்டு
அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்து
கிள்ளி கொஞ்சம் பார்க்க வேண்டி
கிணத்து மேட்டில் ஒளிஞ்ச மச்சானே

காத்து வாக்கிலே செய்தி ஒன்னு
களத்து மேட்டுலே இப்பே சுத்துதய்யா
நெஞ்சுக்குள்ளே அந்த நெனப்பு
நெருஞ்சி முள்ளாக் குத்துதய்யா

கவிஞர் கரு.கிருஷ்ணமூர்த்தி

# முண்டாசுக் கவிஞன்

முறுக்கு மீசைக்காரன்
முண்டாசுக் கவியாளன்
அடக்குமுறையினை தீயிலிட்டு
ஆணவங்களை தூக்கிலிட்ட
தீரன்மகனை வையம் போற்றுமே
வரிகள் என்னும் வாளால் போர்புரிந்து
தமிழால் வாழ்ந்து
தமிழுக்காக வாழ்ந்து
தமிழை வாழவைத்துக் கொண்டிருக்கும்
வான்மகனை வையம் போற்றுமே
விதியினை மதியால் வென்று
தமிழ் வாசம் வீசச் செய்த
தமிழ்மகனை வையம் போற்றுமே
வார்த்தைகளை வரிகளாக்கி
வரிகளை உள்ளத்தில் கலந்து
உள்ளத்திலிருக்கும் உணர்வினைத் தூண்டி
புதியதொரு உலகம் படைத்த
மறவன் மகனை இவ்வையம் என்றும் போற்றியே வாழுமே



கவிஞர் ரதிப்பிரியா ராஜசேகர்,இடைப்பாடி

# அதிகாரம்

அரசு பணி என்பது ஊதியம் பெறும் வேலையல்ல
அது அதிகாரத்தை பரவலாக்கும் செயல் திட்டம்
மூளையின் செயல்பாட்டில் தொடங்குகிறது அதிகாரம்
கட்டளையாக
அதிகாரம் எதையும் செய்யும் ஆயுதம்
அதை பயன்படும் நிலையில் உள்ளது அதன் தன்மை



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு

# நீர்

நீரின்றி அமையாது உலகு வள்ளுவன் மொழி!

அமிழ்தம் என்கிறது தமிழ் இலக்கியம்!
உயிர்கள் தாகம் தீர்த்திடும் தேவதை!
உருவாக்க முடியாது என்கிறது அறிவியல்!
மாசுபடுத்தக்கூடாது என்கிறது சூழியல்!

தன்னலமில்லா தாயை போன்றவள்!
ஐம்பூதங்களில் தன்னிகர் இல்லாதவள்!
மங்கையை போல் பருவ மாற்றத்தை கொண்டவள்!
குறுகிய வெளியில் குட்டையாக இருப்பாள்!
மலைமுகடுகளில் அருவியாக தவழ்பவள்!
மனநிறைவோடு ஆழியில் கூடல் கொள்வாள்!
மாந்தரோடு இடைவிடாத கலந்தவள்!
கார்மேக கூட்டங்களில் வாழ்பவள்!
சூழியல் கோட்பாட்டை வரையறை செய்பவள்!
இந்ஞாலத்தில் மூன்று பங்கை கொண்டவள்!
இவ்வளவு சிறப்பு மிக்க தேவதையை
குவளைகளில் அடைத்து வணிக பொருளாக
மாற்றிய கயவர்கள் நாம்!



களவாடும் கற்பனை பொருள் அல்ல!
சிறைபடும் காட்சிப்பொருள் அல்ல!

கவிஞர் செ.தமிழ்நேயன், சென்னை

# தவிக்கும் மூதாட்டி

தனிமைக் கொடுமையில் தவிக்கும் மூதாட்டி
இனிமை இல்லை யாரோ வழிகாட்டி

பெற்ற பிள்ளைகள் கழித்திட்ட மாபாவி
உற்ற குறைதீர துடிக்கிறதே ஆவி

வானரம் வந்திங்கு ஆறுதல் கூறுதோ
வதன வாட்டத்தில் மாறுதல் வருகுதோ


மனப்பாரம் அதனால் இங்கு குறையுமோ
மன்றாட்டம் அடங்கி மகிழ்வு அடையுமோ



கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)

# அழகு தேவதை!

வானத்து நிலவு பேசு மடி
பூமியில் விழியை பார்க்குமடி
தேவதை இவளா ஏங்குதடி
மேகமும் கரைந்தே தூவுதடி
தாவணி நனைந்தே வீசுதடி
என்னில் அடங்க வார்த்தையடி
உன்னில் தெரிய பேசுதடி
மணல் பட்டு பாதம் தேயுதடி
அனல் தீண்டி தேகம் கரையுதடி
தேவதை நீ போதுமடி
என்னை வதைக்க வந்த சாபமடி



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# வெற்றுக் காகிதம்?

மனிதனின் மாபெரும் கண்டுபிடிப்பு
மானங்கெட்ட பிழைப்புக்கு முத்தாய்ப்பு
அதுவன்றி ஓரணுவும் அசையாது!
வெற்றுக் காகிதம்! விலை மதிப்பில்லாதது!

வேறெந்த உயிர்க்கும் தேவையில்லை
மனிதனுக்கு இதுவன்றி வேறெதுவும் தேவையில்லை
உண்மையில் உழைப்பே உருமாறுகிறது
உதவாக்கரை கையிலும் சேருகிறது!

முட்டாப் பயலையும் முதலாளி ஆக்குகிறது
தீரா வினையெல்லாம் சேருகிறது
அறத்திற்கும் துணை
அக்கிரமத்திற்கும் துணை!

வினைக்கு பயனுண்டா தெரியாது?
பணத்திற்கு பயன் உண்டு
நல்வினை தீவினை உண்டு!
நல்ல பணம் தீய பணம் உண்டா?




ஆலகால விஷமா?
அமுத சுரபியா?
சர்வரோக நிவாரணியா?
சாட்சாத் கடவுளா?


கடவுளுக்கும் பங்கு உண்டு
கடத்தலிலும் பங்கு உண்டு
கயவர்க்கும் பங்கு உண்டு?
பணம் ஒரு கருவி! மனிதனே கிருமி!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# அவளதில்காரம்

அழகுக்கு அழகு சேர்த்த அவளின் இதழுக்கு
என்விரல்கள் ஏங்கியதை
எப்போது அறியப்போகிறாளோ அவள்





விரல் அசைத்து புன்னகைக்கும் அவளிடன்
விரலின் எண்ணிக்கை கூறவா
என் இதயத் துடிப்பை எண்ணித் தொலைக்கவா



உடைமாற்றி இடைபிடித்து நின்றவளிடம்
டவல் ஏந்தி நிற்கிறது பாத்ரும் கதவுகள்
தவித்துக்கொண்டு இருக்குகிறது
தாழ்ப்பாளின் விரல்கள்



சிணுங்கி சிணுங்கி அருகில் அமர்ந்த அவளுக்கு
சீரகப்பல்லா,
சீரக சம்பா பல்லா.
முத்தமிடாமல் எப்படிச் சொல்ல!



சிரித்துக்கொண்டே இரு
மாலைப்பொழுது கழிந்து
வெளிச்சம் உன்னில் பிறக்கட்டும்

கவிஞர் சே கார்கவி,நாகப்பட்டினம்

# மூடி

அவள் அன்பை மூடி மறைத்தாள்
அவள் இதயத்தை மூடி மறைத்தாள்
அவள் கவலையை மூடி மறைத்தாள்
அவள் காதலை மூடி மறைத்தாள்
அவள் நடப்புகளையும் மூடி மறைத்தாள்
அவள் சொந்த களையும் மூடி மறைத்தாள்
ஏன் அவள் எல்லாவற்றையும்
மனசுக்குள் பூட்டி வைத்தாள்
அவளுக்கென்று ஆசைகளே கிடையாதா?
மூடி வைத்த கவலைகளை
நீ திறந்து பார்.
அப்போது தெரியும்
மூடி வைத்த சந்தோசங்களை
நீ முடக்கி வைக்காதே,
நீ வெளியே வா பெண்ணே
முடியும் என்ற நம்பிக்கை
உனக்குள் இருந்தால் உன்னால் முடியும்
எதையும் மனதுக்குள் மூடி மறைத்து வைக்காதே.



காரணம்

அது அழிவு தரும் என்பதை
நீ உணர வேண்டும்
ஒவ்வொரு நாளும் நம் கவலைகளை தீர்ந்து விட வேண்டும்
அப்போது தான் சந்தோஷம் என்ற.
கவலைகள் பிறக்கும் பெண்ணே
எழுந்து வா பெண்ணே!
மூடி வைக்காதே

கவிஞர் தமிழருவி.ஏ.கோபி,நத்தம்

# சொல்லத் தெரியாது

உடன் பிறந்தவர்களுக்காக
விட்டுக் கொடுத்து வாழ்ந்த
நேச வாழ்க்கையை

உயிருறவான அம்மாவுக்கு
உறுதுணையாக வாழ்ந்த
இளமைக்கால வாழ்க்கையை

மணமான போதிலிருந்து
கணவனுக்காக வாழ்ந்த
காதல் வாழ்க்கையை

குழந்தை பெற்றதிலிருந்து
பிள்ளைக்காக வாழ்ந்த
பிரதிபலன் பாராத வாழ்க்கையை

கணவனின் பெற்றோருக்கு
மகளாக வாழ்ந்த
அர்ப்பணிப்பான வாழ்க்கையை

கடைசிக் கால வரமான
பேரர்களுக்காக வாழ்ந்த
பிரமிப்பான வாழ்க்கையை

திரும்பக் கேட்டால்
சொல்லத் தெரியாது
அன்பின் வடிவான
அம்மாவுக்கு.



கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# முரண்

நேத்திக்கடனில்
பலியாகும்
ஆடுகளுக்காய்
பாவமன்னிப்பு
கேட்கிறான்
ஆண்டவன்

தொடர்ந்து
வளையும்
கேள்விக்குறிகள்
முடிவது
என்னவோ
முற்றுப்புள்ளியில்தான்

பணக்கார
எளிமை
எளிமையாக
ஏழையின்
எளிமை
வறுமையாக




கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# சிறப்புலி நாயனார்

பொன்னி நதி ஓடும் புவனத்தில் வாழும் மக்கள்
இன்மையால் இரந்து வருபவர்களுக்கு உதவுவார்
தன்மையான வேதியர்கள் வாழும் நல்ல நாடு
மன்னனான சிவன் அருள் புரியும் நாடு திரு ஆக்கூர்

ஊரைச் சுற்றி சோலைகள் பூத்துக் குலுங்க பூவாசம்
கார் முகில் மேகங்கள் முகர்ந்த நீருடன் மிதக்கும்
தேரோடும் வீதிகளில் மாட மாளிகைகள் வான் தொடும்
பார் போற்றும் சோழ மன்னன் அரசாளும் திரு ஆக்கூர்

ஊர் தோறும் சிவனடியார்கள் ஓதும் ஐந்தெழுத்து மந்திரம்
தேர் ஓடும் வீதிகளில் யாகசாலையில் எழும் வேள்விப் புகை
நீறு பூசிய அடியார் திருமேனியில் வீசும் விபூதி வாசனை
பேறு பெற்ற திருஆக்கூரில் பிறந்தவர் சிறப்புலி நாயனார்

அன்பரகள் அவரைத்தேடி தினம் தினம் வருவார்கள்
என்புருக வரும் அடியாரகள் திருவடிகள் பணிவார்
துன்பங்கள் நீக்கி நவநிதிகள் கொடுத்து உதவுவார்
இன்மொழிகள் கூறி அமுது படைத்து இன்புறுவார்

அஞ்சு எழுத்து ஓதி கோவில் திருப்பணிகள் செய்வார்
நஞ்சுண்ட கண்டனுக்கு ஆறுகால பூசைகள் செய்வார்
பஞ்சு போன்ற மென்மையான மனம் உடையவர் அவர்
தஞ்சமென வருபவர்கள் நெஞ்சம் குளிர்ந்து செல்வார்கள்




யார் யாருக்கு என்ன என்ன வேண்டும் ஆராய்ந்து தருவார்
அவரவர் குறிப்பறிந்து மறுக்காமல் தொண்டு செய்வார்
எவர் எது கேட்டாலும் இல்லை என்று சொல்ல மாட்டார்
பாரினில் புகழ் பெற்று வாழ்ந்தார் சிறப்புலி நாயனார்

தினம் ஆயிரம் அடியாருக்கு அமுதுபடைக்க சங்கல்பம்
மனம் எண்ணியபடி நாற்பத்தி எட்டு நாட்கள அன்னதானம்
கனம் பொருந்திய அடியார்கள் வயிறார உண்டார்கள்
தனம் மிகுந்த சிறப்புலியார் "எல்லாம் சிவமயம்" என்றார்

தடை இல்லாமல் ஆயிரம் இலைகள் அறுசுவை அமுது
படை எடுத்தது போல் ஆக்கூரில் அடியார்கள் வாசம்
கடைசி நாள் நாற்பத்தி எட்டாவது நாள் வந்தது சோதனை
விடை தெரியாமல் நின்றார், ஒரு அடியார் வரவில்லை

வழக்கப்படி ஆயிரம் அடியார்களுக்கு ஒருவர் வரவில்லை
குழம்பிய படி ஒரு அடியாரை ஊர் முழுதும் தேடினார்
விழுச்செல்வம் இருந்ததென்ன என் விரதம் பொய்க்குமோ
அழுதார், கலங்கினார், மானம் இழந்து உயிர் வாழனுமா ?

ஒரு இலைக்கும் அடியார் வந்துவிட்டார் அமுது உண்டார்
திரும்பிப் பாரத்தார் அமுது அருந்திய அடியார யார் இவர்
விரும்பி தானே அடியாராக வந்த ஈசனைக் கண்டார்
"பெரும்பதம் பெற்றேன் உன் அருளாளே! சிவாயநம"

**கவிஞர் ந.திருக்காமு**

# காசே தான் கடவுளப்பா

"ஈட்டி எறிவது வரைக்கும் பாயும்"
ஆனால், பணமோ பாதாளம் வரை பாயுமே!
"பணம் என்றால் பிணமும் வாயை திறக்கும்!
இந்த பழ மொழிகளில் உள்ள உட் கருத்துக்கள்
மனித சமுதாயத்தின் அடையாளமே!
செல்வந்த பெருமானாகிய பட்டினத்தாரை,
மகன் மருதவாணனின் ஒரே ஒரு
வாக்கியத்தில் அவருடைய வாழ்க்கையே
புரட்டிப் போட்டு உலகுக்கு ஓர்
உத்தம புருசனை கொடுத்ததே!
அது "காதருந்த ஊசியும் காணாது காண்
கடை வழிக்கே"
ஒரு மனிதனின் ஆயுட் காலத்தில்
சேர்த்த செல்வங்களை போகும்
காலத்திலாவது தான தர்மங்களை
செய்யாலாமே!
"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை
அருள் இல்லாதவற்கு இவ்வுலகம் இல்லை".
பொருள் தேவை தான்
அதை நியாயமான வழியில்
ஈட்டி நன் மக்களுக்கு
தானம், தர்மங்கள் செய்து
வாழ்வில் பேறு பெறலாமே!



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# இதுதான் நீ வாழும் உலகம்

முகத்தின் முன்னே வாழ்த்துவர்
கசிந்துருகிப் பேசுயே
உயிர்ப்பான உணர்வுகள் காட்டுவர்

உன்னுள் ஊடுருவி உலாவந்து உளவுபார்ப்பர்
மெய்யெனவே உணர்ந்திடும்
நீயறியா நல்ல நடிகர்கள்



அனுபவங்களால் அறியும்கால்
அத்தனையும் நீ உணரா
உலகமாயை
புரிந்திட நாளாகும்

உன் உயர்வினில் அகமகிழா
முகமலர்வில் உனைவாழ்த்துவர்

உன் நிலையது தாழ்கையில்
உனைத்தேற்றுவோராய் நடிப்பர்
உள்ளத்தால் உவகைகொள்வர்

உன் நற்பணி போற்றலில்
கண்டும் காணாதவர் போலாகும்

தவறொன்று நீ செய்திட்டால்
வதந்திகள் வேர்விட்டுக் கிளைவிடுதலில்
நொடிப்பொழுதாகும்

புரிந்துகொள்ள நாளாகும்
அனுபவங்கள் பாடல்களாகும்

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# முயற்சி


முயற்சி + பயிற்சி=முன்னேற்றம்
இது வாழ்க்கை கணக்கு
சோம்பியவனுக்கு தோல்வி
உழைப்பவனுக்கு வெற்றி.

தன்னம்பிக்கையுடன்
சுவாசிப்பவனுக்கு
ஆயுள் கூடும்
சுய சக்தியை மேம்படுத்தும்

மெய்ப் பாடு
உயர்வு வழிபாதைக்கு
வழிபாடாய் வளமுட்டும்

லட்சியமே உனது
அட்சயபாத்திரம்
நம்பிக்(கை)கொடுக்கும்

நற்பயிற்சி உயர்வுக்கு
உறுதுணையாகும்
முன்னேற முழு முதற்படியாகும்




கவிஞர் ஞா.போனிபாஸ்,கடலூர்

# பொழுதுபோக்கு

பின் நாளில்
குதூகலிக்கவும்
கொண்டாடித் தீர்க்கவும்
அவசியமாகிறது
பொருளற்றதாய் கழிந்த
சில பொழுதுகள்!



கவிஞர் கனகராஜ் ராஜூ

# வறுமை

வறுமை என்பது வாட்டுகின்ற நிலைப்பாடு
வசதிக் குறைவால் திண்டாடும் பெரும்பாடு

பசியறியும் வயிற்றுக்கு கிடைக்காத உணவு
பட்டினியால் வாடும் வறுமையின் கோரதாண்டவம்

பணங்கொண்டு அன்றாட வாழ்வு நடத்தவும்
அத்தியாவசியத் தேவையும் இல்லாத பரிதாபம்



சொட்டச்சொட்ட ஒழுகும் குடிசைகள் இதனடையாளம்
சொட்டுகிறதே வறுமையால் இரத்தக் கண்ணீரும்

வீடுகளும் இன்றி சாலையோரம் வசிப்பது
வாழ்வாதாரம் இன்றி வஞ்சிக்கும் விதியோ

ஒருவேளை சோற்றுக்கும் கையேந்தும் அவலம்
அடுத்தவேளை உணவையெண்ணி அதுவும் இறங்காதே

இந்நிலை கண்டு ஏளனம்பேசுவோர் ஏராளம்
இருப்பவர் இல்லாதவர்க்கு கொடுப்பது தாராளமனம்

தணியாதோ வறுமை என்னும் வெந்தழல்
என்று மாறிடும் இக்கொடூரச் சூழல்

கவிஞர் தேவிஸ்ரீ கார்த்திக்,இராஜபாளையம்



Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்

பசிக்காய் அழுதே அம்மாவின்
வருகைக்காய் காத்திருந்தே
தவழ்ந்த போது எப்போது
நடப்போம் எனக்கரம் பிடித்து.

கல்விச்சாலையில் கவின்மிகு
இளமையில் கல்வியின்
புரிதலுக்கு தவித்து விரக்தியில்
வீட்டுப்பாடம் எழுதாமல்.

கல்லூரிக்காலங்களில் அரும்பு
மீசைக்காய் ஏங்கி
கடைக்கண் பார்வைக்காய்
தவமிருந்து..தவித்து.



வேலை கிடைக்கவில்லையென
தண்டச்சோறு பட்டம் பெற்று
தவிப்பாய் தலைபோகிற கனவுகளோடு
நேர்ப்பட பல கேள்விகளுக்கு
பதில் தேடி.. பரிதவித்து.

திருமண வாழ்வில் திகிலான
திருப்பங்கள் மிகுந்த.
தேவதையோடு குடித்தனம்
தேடி வாழ்ப்புகுந்த காலங்களில்

தனி வீடு வாங்க வங்கிகளுக்கு
அலைந்து.. அதற்கு மாதத்
தவணை கட்ட விழி பிதுங்கி
தவறவிட்டவைகளைத்தேடி.

வாரிசுகளைப் பட்டம் வாங்கிட
வாய்வழியாய் வழிந்த
நுரை தள்ளும் குதிரையாய்
பயணம் பயமாய் தொடர.

நரை விழுந்து நாடி நரம்பெல்லாம்
தளர்ந்து போக.. நாளைகளைத்
தேடி தேடி கட்டையிலே போகுமுன்
மோட்சம் தேடி.

என்றெம தின்னல்கள்
தீர்ந்துபொய் யாகும்
என்றேனும் சுகத்தேடல்களின்
வாழ்வின் நவரசம்
எப்படி என இரசித்து
உணர்ந்திட
என்றெம தின்னல்கள்
தீர்ந்துபொய் யாகும்

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பாய்


# கண்டும் காணாமல்

பொறுப்பில் இருக்கும் தீயவர்கள்
பொறுப்பில்லாமல் இருக்கும் குடும்பத்தலைவர்கள்

நேரத்தை வீண்டிக்கும் இளைஞர்கள்
நேர்த்தியில்லாத தொழில்சாரர்கள்

வெற்றிக்கனி யாரோ ஒருவர் கையில்
உள்ளது என நம்பி வீணாகும் தலைமுறை

திறமையுடன் வெளிவந்த பெண்களைவிட
திறன் இல்லாத ஆண்களை அடைந்த
பெண்ணினத்திற்கு கண்டும் காணாமல்
செல்லும் வலிமை கொடு என் இறைவா




கவிஞர் பானு அப்துல்லா

# கடைசியாக வெயில்

நீண்டிருக்கும் ரேசன்
கடையின் போதிமர
நிழலில் ஓடிப்போகாத
ஏழ்மைப் புத்தர்கள்
கால்கடுக்க நிற்கையில்

வரிசையின் கடைசியில்
நிற்கப் பழகிக்கொண்டது
ஞானமற்ற வெயில்!



கவிஞர் ரகுநாத் வ,மதுரை

# மழலை

பாற்போல் வெழுத்த மனது
அதை விட எது ?
காணும் போது கண்ணிமைக்கும்
கணப்பொழுதே பற்றி
கொஞ்சிட தோன்றும்.

காலகரையில் வயதென்று
சென்றும் திரும்பிட தோன்றும்
பருவமிது.

பசியினையும் மறந்து
சிறுபஞ்சிளங்கள் கூடி,
பல்லாங்குழி பம்பரமாடி

அந்தி சாயும் வேலை
கண்ணாம்பூச்சியாடி
கவலைகள் மறந்தோமே
அந்த நாட்கள்
மழலையாவர் எம் கதை சொல்லும்.



செல்லமான கண்டிப்புக்கள்,
செய்கையால் விளைந்த தண்டிப்புக்கள்
தாத்தா பாட்டியினர் தினம் அளக்கும்
கதைகள், செவிவழி மயக்கமாகி
படுக்கைக்கு அழைக்கும்.

கனவில் கற்பனைக்கு அளவேயில்லை
அன்றைய நாட்களில்
விளையாடிய ஞாபங்கள்
பெற்றோர் தன்பிள்ளை
வாயுலம்பல் கண்டு இன்புறும் வரை
ஆசை மீண்டும் மழலையாவதில்
பேராசை.

கவிஞர் வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்

# ஹைக்கூ

(1)
அம்மாவின் அதட்டல்
அழுது தீர்த்த குழந்தை
கனத்த மழை



(2)
கைதவறிய பாத்திரம்
தரையில் கோலம் இட்டது
கண்ணாடிக் குவளை

(3)
உணர்வுகளின் வலி
உரையாடல் விழி
மெழுகும் காதல்

(4)
விரக்தியின் உச்சகட்டம்
விண்ணிற்கு விருந்து
தழுவிடும் மரணம்

(5)
எரித்திடும் இரணம்
கொழுந்திட்டு கொந்தளிப்பு
தீராப்பிணி

கவிஞர் அன்ஷியா,திருகோணமலை(இலங்கை)

# பெண்ணே நீயும் வாள்முனைதான்

நெருப்பாற்றில் நீந்தி கொண்டு
கொடியவர்களின் கூடாரத்தில் குடியிருக்கும்
பெண்ணே
உன்னை உரசிப்பார்க்க வருபவர்களுக்கு
தெரியாது
நீயும் ஒரு வாள்முனை என்பது.

பெண்ணே நீ ஒரு
பூமித்தாய்
உன்னிடம் அவர்கள்
வெறும் கைமண்
மட்டும் தான் எடுக்க
முடியுமே தவிர
உன்னை எடுக்க முடியாது

அந்த வானம் என்ன தான்
உயரத்தில் இருந்தாலும்
கீழே இருக்கும் உன்னிடம்
அழுது மழையாய்
வருகிறது பூமித் தாயே

வீழ்த்துவது மட்டுமே வீரமல்ல
தாய்மையாய்
கட்டி அணைப்பதும் வீரமே
என்று காட்டுகிறாய்
என் தாயே, பெண்ணே

வஞ்சக சூழ்ச்சிக்காரர்களுக்கு
தெரியாது
உன்னிடம் இருப்பதும்
ஒரு கொலைவாள்
என்று.

போலி முகத்திரையை
உன்மேல்
போர்த்தியிருக்கும்
அவர்களுக்குத் தெரியாது
உன் வாள்முனை தான்
அவர்களின் நிஜ முகத்தை
கிழிக்கும் என்பதை பற்றி.



விழ்த்தும் விடாது
யாரிடமும் மண்டியுமிடாது
பெண்ணே அதுதான் உன்
மானம்.

காலச்சக்கரத்தில் நீ சுற்றும்
போர்வாள்
அதற்கு அப்பால் தான் வரும்
பெண்ணேனும்
பேரினத்தின் புரட்சி.

கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சாக் கவுண்டம் புதூர்

# முதியோரை மதி

திண்ணை பள்ளியின் மூத்த ஆசான் எம் முன்னோர்
என்னை வெள்ளியின் தீட்டிய பதக்கமாய் செதுக்கினாய்
மூத்தோரை மதிக்கும் பழக்கம்
இளையோனுக்கு எதற்கும் துணை நிற்கும்
படித்த முடித்த புத்தகத்தை எடுப்பதில்லை
வளர்ந்து முடித்த பிறகு முதியோரை மதிப்பதில்லை
சிந்தனையை முந்தானையில் முடிச்சு போட்ட எம்முன்னோரே
காலமும் நேரமும் சூரியனில் கணக்கு போட்ட எம் கற்றோரே
வாழ்க்கை என்னும் கரைகளை முட்டுக் கொடுத்த மூத்தோரே
தட்டிக் கொடுத்த தாயுமானவரே
கொட்டிக் கொடுக்கும் அறிவுக் களஞ்சியமே
செப்பினில் செதுக்கப்பட்ட பட்டயமே
இளவலுக்கு ஒதுக்கப்பட்ட பட்டாபிஷேகமே
மூத்தோரே முதுமை பெற்ற தாயகமே
உன்னில் உண்ட அறிவை
என்னில் கண்ட செறிவை
வியந்தோர் வியக்க அறிவை பெற்றேன்
உனை காக்க என் அறிவுவிரல் கொண்டேன்
எனை சிறக்க உன் செறிவை தந்தாய்
மூத்த மொழியே என் முன்னோர் விழியே
உன் பார்வையில் ஆயிரம் மொழி
அதில் பாவங்களை கழி
நீ சுட்டு போட்ட வார்த்தை
முட்டி கிட்டு நிற்குதடா
வாயை மூடி பேசுமடா
எம் முன்னோர் வார்த்தை காதில் கூசுமடா
அவரை மதியா பேசாதே சமூகம் உன்னை ஏசுமடா
வெறும் காகிதம் தான் அவர் முன்னே காசுமடா
அவர் அறிவின்முன் நீ வெறும் தூசுமடா




கவிஞர் இர சிவமணிகண்டன்

# உடன்பிறப்பே

உள்ளன்போடு,
உளமார வாழ்ந்திடுவேனே,.
உதாரணங்களுமே,
உசிதமாகவும்,

உரிமைகுரலுமே,
உள்நின்று உரைக்க,
உத்தரவுக்கு,
உள்ளபடி பணிந்தேனே,



உள்பணிந்ததாலே,
உயர்குணங்களாலும்,
உச்சியில் ஏற்றினாயே,
உச்சாணிக்கொம்பிலே,

உதிரமும் சிந்தாமலே,
உக்ரமும் அடையாமலே,
உள்பனிகுளிராக,
உகுந்த நிலைமாறா,

உதவியென்றதுமே,
உள்நினைக்கையிலே,
உண்மையாக வருவாயே,
உடன் இருப்பாயே,

உடன்பிறப்பேயானாலும்,
உலாவுவாயே தாயன்போடு,
உருவமும் கொண்டேனே,
உன்னைப்போலவே,

உன்மத்தத்திற்குமே,
உரிமையுள்ளவளாக,
உளியில்லா செதுக்கிய,
உயிர்சிற்பமே,
உளவுகிறேனே நானுமே!

கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# என் தனிமைக்குள் வராதே!



தாளாத கோபமோ,
தவிக்கும் ஏக்கமோ,
தீராத பகையோ,
தீர்ப்பற்ற சொல்லோ
எனக்குள் கரைந்திடும்
என் தனிமைக்குள் வராதே!

சிரித்த என் முகத்தின் சீற்றமும்,
செவிக்கு ஒரு சொல்லின் பதிலும்,
வெளி பரப்பில் காட்டாத வெறுமை,
வேகமாய் வாய் திறக்கும்.
என் தனிமைக்குள் வராதே!

சுயமாய் சிலபொழுதுகளின் சுதந்திர காற்றாய்,
முகமூடி கலட்டிய முகத்தை
நான் முழுதாய் சுகிக்கும் - அந்த
என் தனிமைக்குள் வராதே!

வேற்று மனிதராய் உன்னில் நான்
மாற்று முகத்தோடு கடந்ததே மகிழ்வாய்கொள்;
தோளில் கரம் போட்டு
தோழமையோடு நெருங்கி
என் தனிமைக்குள் வராதே!

இறுமாப்பில் சொல்லவில்லை,
இனிமையிலே சொல்கிறேன்.
என் தனிமைக்குள் வராதே!

கவிஞர் அங்கப்பன் மாயராஜ்,நெற்குப்பை

# முத்துக்குமரன்

ஊணின்றி வாழ்வுமிலை! வளர்ச்சியிலை! உடுக்கையிலா
நிர்வாணம் அவமானம்! கைபோர்த்திக் காத்திடுமே!
ஆடையது இல்லாமல் பிறந்தநாம்தான் ஆசையது
அற்றவராய்த் தோன்றினோமா? உடுப்பவையோ இரண்டென்றார்
முந்தையரே! இந்நாளில் பல்கியது பெருகியதே!
வாழில்லும் வேண்டியதே! இம்மூன்றைப் பெறுதற்கு
வேளாண்மை நூற்றுநெய்தல் தொழில்செய்தல் வேண்டுவதாம்!
பஞ்சென்றும் பட்டென்றும் இருந்ததுபோய் வாழையென
கற்றாழை போன்றவையும் புதுவதுவாய் புகுந்தனவே!
இடுப்பமையும் வேட்டிசேலை லுங்கிவகை கைலியென
புத்துருவம் கொண்டதுவே! ஆடவர்க்கும் மாதரார்க்கும்
சேயர்க்கும் தனித்தனியே அமைந்ததுவே! நீரதனில்
நனைந்திட்டால் சுருங்குநிலை போக்குதற்கு வழிகண்டார்!
வெண்மைதான் முந்தியதே! வண்ணங்கள் கூடினவே!
புள்ளிகோடு பூயிலைகள் சித்திரங்கள் ஏற்றவையும்
மிளிர்ந்தனவே! காஞ்சிக்குப் போய்விட்டால் காலாட்டிச்
சாப்பிடலாம் என்பார்கள்! நெசவினையே உணர்த்துவதாம்!
பாவாடை ஆடவர்க்கு வேட்டியது மாதரார்க்கு
என்றமைந்த லுங்கியுரு புதுவதுவாய்த் தோன்றியதே!
காஞ்சிநகர் நல்முத்துக் குமரனவர் லுங்கிவணிகம்
கண்டாரே! அவர்பாட்டன் தந்தையென மரபாகத்
தொடர்ந்ததுவே! கைத்தறியும் விசைத்தறியும் மேம்பாடு
உற்றதுவே! உள்நாடு மட்டுமன்றி ஓமனுக்கு
ஏற்றுமதி ஏற்றத்தைப் பெற்றதுவே! பின்னரது
பன்நாட்டு வர்த்தகத்தை எட்டியதே! மலேஷியத்தும்
இலங்கைதனில் மியான்மரிலே மக்களங்கு பணியிடத்தே
வெளிநிகழ்வில் லுங்கிதனில் பங்கேற்றார்! பெண்டிர்களும்
குழந்தைகளும் அப்படியே! ஆண்டிர்க்குப் பன்னிரண்டு
லட்சத்தில் லுங்கிகளின் உற்பத்தி விற்பனையை
எட்டியதே! முயன்றுழைத்தோய்! முத்துக்கும ரனே போற்றி!



கவிஞர் கணக்காயன் (இ சே இராமன்)

# அழுகின்றாயா?




அழுகின்றாயா
அழு.
நன்றாக அழு
ஆழமாக அழு.
மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்குமாறு அழு.
சத்தமாக அழு.
அமைதியாக கூட அழு.
மூலையில் முடங்கி போய் அழு.
யாருமில்லாத பகலில் அழு.
யாருமறியாத இருண்ட இரவினில் கூட அழு.
வீதியில் சென்று கூட அழு.
வியர்வை துளிகள் சிந்தினாலும் கூட அழு.
இறுதியாய் கண்ணீர் சுரப்பிகள் வற்றிப் போய்விடும்.
வற்றிய பின்பு வா.
நான் ஏதேனும் சொல்வதை
உந்தன் செவிகள் கேட்கும்.
செவியினுள் நுழைந்த வார்த்தைகள்
உன்னுள் ஏதேனும் சிறு மாற்றம் செய்தால்.
அந்த பேரின்பம் போதுமே.

கவிஞர் கு.ரமேஷ்குமார்&ரமேஷ்யோகி,மதுரை

# செயற்கை நுண்ணறிவு!

அறிவின் துணையாலே சிந்தித்து செயலாற்றி
விரைவாக சிக்கல்களைத் தீர்த்திடுமே மனிதகுலம்!
இயந்திரங்களால் கடின வேலைகள் எளிதாச்சு!
எத்தனையோ மனிதர்கள் எட்டிய தீர்வுகளை
மொத்தமாய்த் தரவுகளாய் உள்ளீடு செய்திட்டால்
திறமையாய்க் கையாண்டு, உரையாடல் மொழியிலேயே
விரைவாக பதிலிறுக்கும் இன்றைய தொழில்நுட்பம்!
செயற்கை நுண்ணறிவவால் இயந்திரங்கள் சிந்திக்கும்!
இயந்திரக் கற்றல் நிபுணர்களுடன் இணைந்து
விஞ்ஞானிகள் செயலாற்ற, மருத்துவத் துறைதனிலே
மருந்துகள் புதிதாக! மகத்தான சாதனைகள்!
இக்ரிசாட் செயலி விவசாயத் துறையினிலே
அத்தனை பணிகளுக்கும் ஆலோசனை அளித்திடுதே!
ஐந்தாண்டு பயிற்சியின்பின் எந்திர வழக்கறிஞர்
உண்மைகளை ஆராய்ந்து தீர்ப்பளித்தல் விந்தையன்றோ?
ஆந்திர மாநிலத்தில், கல்வித் துறையினிலே
மாணவர்களின் தரவுகளை ஆய்ந்து இடைநிற்றல்
எண்ணிக்கையை முன்கூட்டி உரைத்தது இத்தொழில்நுட்பம்!
இனிவரும் காலங்களில் செய்ற்கை நுண்ணறிவே
மனிதகுல மேம்பாட்டிற்கு உறுதுணை! ஐயமிலை!
இதனை உருவாக்கியவர்களின் ஒருவர் ஜெஃப்ரிஹிண்டன்!
வேதனையுடன் சொல்கிறார் விளைவுகள் மோசமென்று!
செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், மனிதர்களின்
இயற்கையான சிந்தனைத் திறனை, படைப்பாற்றலை
செயலிழக்கச் செய்யும் என்பதையும் மறுப்பதற்கில்லை!
போலிச் செய்திகள், புகைப்படங்கள், காணொளிகள்
உலவிடும் இணையத்தில்! உபயம் இத்தொழில்நுட்பம்!
பலதுறைகளின் பயன்பாட்டில் பயனுண்டு இதனாலே!
பலவிதத்தில் பயமுண்டு தவறான பயன்பாட்டால்!
நல்விதமாய் நாமதனைப் பயன்படுத்த நன்மையுண்டு!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(கட்டுரை)

**சிறிதினும் பெரிதாக**



2-ஆண்டுகளே படிப்பு, 29-ஆண்டுகளே வாழ்வு, 6-ஆண்டுகளே கலையுலக வாழ்வு, 57-படங்கள், 262—பாடல்கள். சிறிய ஆண்டுகளில் பெரிதாய் வாழ்ந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

**குருவாக**

விவசாய சங்கம், பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்தார். 1952-ல் பாண்டிச்சேரி சென்று பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழ் பயின்றார். பின்னர் அவர் நடத்திய 'குயில்' இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். தனக்கு தமிழ் கற்பித்த குரு பாரதிதாசன் வாழ்க என்று எழுதிவிட்டுதான் கடிதம் எழுதத் தொடங்குவாராம். வேளாண் தந்த பட்டறிவு, பாரதிதாசன் தந்த மொழியறிவு, கம்யூனிசம் தந்த கருத்தறிவு இவைகளே இவர் பாட்டின் குருவாக அமைந்தது

**புரட்சிக்கவிஞனாக**

1954 ஆண்டில் பாமரர்களின் கவிஞனாய் பாட்டெழுத வந்தவன். காதலின் களியாட்டம் அல்லது பக்தியின் கொண்டாட்டம் என்று இருந்த பாடல்களின் இடையே, புரட்சி, பொதுவுடைமை, முற்போக்கு, பகுத்தறிவு, போன்றவற்றினை புகுத்தி பாடல்களின் தடத்தையே மாற்றி காட்டியவர் பட்டுக்கோட்டையார்.
1959 வரை எம்ஜிஆர் நடித்த 7 திரைப்படங்கள், சிவாஜி கணேசனின் 11 திரைப்படங்கள் உட்பட பல திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதினார்.

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## (கட்டுரை)

### முதலாக

"நல்லதைச் நாத்திகனா? - உலகில்
இல்லாததை சொல்லி ஏமாற்றுவதுதான் முறையா?" —
தமது 8 வயதில் இந்த பாடலை தமது சகோதரர் கணகபதிசுந்தரத்திடம் பாடி காட்டியுள்ளார். மீதி வரி சகோதரருக்கு நினைவில் இல்லை,

"ஓடிப்போ ஓடிப்போ கெண்டை குஞ்சே - கரை
ஓரத்தில் மேயாதே கெண்டை குஞ்சே
தூண்டில் காரன்வரும் நேரமாச்சு - ரொம்ப
துள்ளி குதிக்காதே கெண்டை குஞ்சே —
இதுதான் பட்டுக்கோட்டையாரின் முதல் கவிதை இதை எழுதும்போது அவரின் வயது 14.

"காப்பி ஒன்னு எட்டணா கார்டுசைசு பத்தணா
காண வெகு ஜோராயிருக்கும் காமிராவை தட்டினா"
(படம் :படித்தபெண்) 1954இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த படம் வெளிவருவதற்கு முன் "மகேஸ்வரி" என்ற படம் வெளிவந்தது. ஆனால் அவர்
எழுதிய முதல் பாட்டு இதுவே.

"புதிய ஒளி வீசுத்துப்பார் இமையம் தாண்டிப்
புன்சிரிப்புக் காட்டுதுபார் இன்பம் அங்கே"
07.11.1954 அன்று ஜனசக்தி நவம்பர் புரட்சி மலரில் வெளிவந்த இந்த பட்டுக்கோட்டையாரின் கவிதைதான் அச்சில் வெளிவந்த முதல் கவிதை.

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(கட்டுரை)

**பொதுவுடைமை இயக்கத்தின் புயலாக**

ஒரு கவிஞனுக்குள் பொதுவுடைமை இயக்கம் என்ற புயல் நுழைந்தால் அவன் எப்படியெல்லாம் பரிணாமப்படுவான் என்பதற்கு பட்டுக்கோட்டையார்

**பாடல்கள் எடுத்துக்காட்டு**

- உழைப்பின் மேன்மை பாடல் - "காடு வெளஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலும் தானே மிச்சம்".

- மூட நம்பிக்கைக்கு எதிராக பாடல்- "வேப்பமர உச்சியில் நின்னு பேயோன்னு ஆடுதுன்னு விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க - உன் வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க.

- மேடு பள்ளமற்ற சமுதாயம் உருவாக செதுக்கப்பட்ட பாடல் - "வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையடா-தனி உடைமைக் கொடுமைகள் தீர தொண்டு செய்யடா-தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா"

- இன்றைய சமுதாயத்திற்கு பொருந்தும் பாடல்- "திருடராய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது"

- சமுதாயத்தின் அவலத்தினை செவியில் ஓங்கி அறைந்த பாடல்- "குறுக்குவழியில் வாழ்வுதேடிடும் குருட்டு உலகமடா "

- தன்னம்பிக்கையை உயர்த்தி பிடிக்கும் பாடல்- "வறுமை நிலைக்கு பயந்துவிடாதே திறமை இருக்கு மறந்துவிடாதே!"

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(கட்டுரை)

**இறுதியாக**

சைனஸ் தொல்லைக்காக சைனஸ் தொல்லைக்காக ஆபரேஷன் செய்தபோது, டாக்டர்கள் தவறான இடத்தில் ஆபரேஷன் செய்துவிட, அதன் பக்கவிளைவாக முகம் வீங்கி சிகிச்சை பலனின்றி, தமது 29 வயதில் 08.10.1959 ல் பட்டுக்கோட்டையார் இயற்கை எய்தினார்.



"தானா எவனும் கெடமாட்டான்
தடுக்கி விடாம விழமாட்டான்
போனா எவனும் வரமாட்டான் - மேலே
போனா எவனும் வரமாட்டான் - இதப்
புரிஞ்சிகிட்டவன் அழமாட்டான்"

இந்த பல்லவிதான் அவருடைய இறுதிப்பல்லவியாகும்

**உருக்கமாக**

"பட்டுக்கோட்டை சாய்ந்ததா? இல்லை பாட்டுக் கோட்டையே சாய்ந்ததம்மா" - கண்ணதாசன்.

"கண்களை மூடுகிறேன்; கல்யாணம் தெரிகிறார்-ஒளி தெரிகிறது! கண்களைத் திறக்கிறேன்: கல்யாணம் இல்லை-கலையுலகு இருட்டாயிருக்கிறது"- கலைஞர் மு. கருணாநிதி

கவிஞர் அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
விரைந்து வந்தேன் என்பதில்
இல்லை.. வீழ்ந்தாலும்
எழுந்து வந்தேன் என்பதில்
தான் உள்ளது நம் பெருமை..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com